# ST. XAVIER'S COLLEGE (Autonomous), PALAYAMKOTTAI – 627 002.

(Recognized as "College with Potential for Excellence" by UGC & Accredited at A++ Grade with a CGPA of 3.66 out of 4 in IV Cycle by NAAC)

---

# Annual Report 2024 - 2025

## TAMIL RESEARCH CENTRE (1981)

1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழாய்வு மையத்தில் முனைவர்ப்பட்ட மேலாய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்வு மையத்தில் பன்னிரெண்டு பேராசிரியர்களின் நெறியாளுகையின் கீழ் 28 ஆய்வாளர்கள் முனைவர்ப்பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர்.

சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம் மற்றும் நவீன இலக்கிய ஆய்வுக்களங்களை அடிப்படையாகக்கொண்டு முனைவர்ப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்த்துறையில் நடைபெறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், வியாழவட்டம் போன்ற ஆய்வுக்களங்களில் ஆய்வு மாணவர்கள் பங்குகொள்கின்றனர். தமிழ்த்துறையில் நடைபெற்ற 'வாழ்வியல் நோக்கில் திருக்குறள்' என்னும் தேசியக் கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்பித்தனர். மூன்று முனைவர்ப்பட்ட ஆய்வாளர்கள் பல்கலைக்கழக மான்யக்குழுவின் நிதி நல்கையின் கீழ் முனைவர்ப்பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.(திரு. அகஸ்டின், திரு. அ. செல்லப்பா, திருமதி. ம. இந்துஜா பிருந்தா). இக்கல்வியாண்டில் மூன்று ஆய்வாளர்கள் முனைவர்ப்பட்டம் பெற்றுள்ளனர். ஆறு ஆய்வாளர்கள் முனைவர்ப்பட்ட ஆய்வேட்டைச் சமர்பித்துள்ளனர்.